MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 11-09-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் (ஆணி 26) | வருட சந்தா ₹ 200<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

புத்தகம் 59 | இதழ் 36 | பக்கம்-12

e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்

## அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார் திருத்தந்தை முதலாம் ஜான்பால்

**“திருத்தந்தை முதலாம் ஜான் பால் அவர்கள், தனது புன்னகையால், ஆண்டவரின் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துவதில் வெற்றிகண்டார்.” - திருத்தந்தை பிரான்சிஸ்**



04.09.2022 ஞாயிறு காலை 10.30 மணிக்கு, வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றிய திருப்பலியில், கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பணியை 33 நாள்களே ஆற்றிய இறை ஊழியர் திருத்தந்தை முதலாம் ஜான்பால் அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருளாளராக (Blessed) அறிவித்தார்.

**Albino Luciani** என்ற இயற்பெயரைக்கொண்ட இத்தாலியரான திருத்தந்தை முதலாம் ஜான்பால் அவர்கள் பற்றி கூடுதலாக மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கென்று, அவரது போதனைகள், ஆழமான ஆன்மிகம், இறையியல் கருத்துக்கள் போன்றவை குறித்து, கர்தினால் பெனியமினோ ஸ்டெல்லா அவர்கள் தலைமையிலான குழு ஒன்று, செப்டம்பர் 02 அன்று செய்தியாளர் கூட்டத்தில் விளக்கியது. இன்றைய உலகிற்கு இத்திருத்தந்தையின் செய்தி மிகவும் முக்கியம் என்று கர்தினால் ஸ்டெல்லா அவர்கள் கூறிய இக்கூட்டத்தில், இத்திருத்தந்தையின் மருமகளான Lina Petri அவர்களும், இத்திருத்தந்தையின் இறந்த உடலை முதன் முதலில் பார்த்த குழந்தை மரியா சபையைச் சேர்ந்த அருள்சகோதரி Margherita Marin அவர்களும், இத்திருத்தந்தை குறித்த தங்களது நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர்.

### யூதர்களுக்கு உதவியவர் - திருத்தந்தை முதலாம் ஜான் பால்

இரண்டாம் உலகப் போரின்போது துன்புற்ற யூதர்களுக்கு உதவியது, தனது மாமாவிடமிருந்து வந்த கடிதங்கள், அவர் கூறிய அறிவுரைகள், புனிதர்கள் அகுஸ்தின், தோமையார் ஆகியோர் குறித்து உரையாடியது போன்றவை பற்றி இத்திருத்தந்தையின் மருமகளான Lina Petri அவர்கள் பகிர்ந்துகொண்டார். பெல்லூனோவில் ஹிட்லருக்கும், முசோலினிக்கும் இடையே நடந்த சந்திப்பு பற்றி குறித்து, எங்கள் மாமா எங்களிடம் கூறியபோது, “நாம் இரு பைத்தியக்கார மனிதர்களின் கரங்களில் இருக்கிறோம்” என்று கூறியதாகவும் லீனா அவர்கள் தெரிவித்தார்.

### அருள்சகோதரி Margherita Marin

வத்திக்கானில் பாப்பிறை தங்கியிருந்த அறையில் உதவியாளராகப் பணியாற்றிய அருள்சகோதரி Margherita Marin அவர்கள் இத்திருத்தந்தை பற்றி இக்கூட்டத்தில் தெரிவித்தபோது, 1978ஆம் ஆண்டு செப்டம்பர் 28ம் தேதி, நானும், அருள்சகோதரி Vincenza Taffarel அவர்களும், இத்திருத்தந்தையின் இறந்த உடலை முதன் முதலில் பார்த்தோம் என்றார்.

### திருத்தந்தையின் பரிந்துரையால் அற்புதம்:

ஒரு சிறுமி குணம் பெறுவதற்காக இத்திருத்தந்தையிடம் செபித்த அர்ஜென்டினா நாட்டு அருள்பணியாளர் Juan José Dabusti அவர்களும் இச்செய்தியாளர் கூட்டத்தில் அச்சிறுமி குணமடைந்தது குறித்து எடுத்துரைத்தார்.

“***திருத்தந்தை முதலாம் ஜான் பால் அவர்கள், தனது புன்னகையால், ஆண்டவரின் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துவதில் வெற்றிகண்டார்***” என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்களை அருளாளராக அறிவித்த திருப்பலியில் கூறினார்.

ஆசிரியர் பேனா...

# நம் பொறுப்புணர்வோம்

**சாதனை இளைஞர்கள்:** இளைஞர் ஒருவர் புதை மண-ல் சிக்கி அமிழ்ந்துகொண்டிருந்தார். இதை கண்ட சில வா-பர்கள் அவரை மீட்க பெருமுயற்சி எடுத்தனர். மனித சங்கி- ஏற்படுத்தி புதைந்து கொண்டிருந்தவரை நெருங்க பார்த்தனர். ஆபத்தில் இருப்பவரை நெருங்கிய வேளையில் அருகிருந்தவர் தான் ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க சிந்தித்து செயல்பட்டார்; லாவகமாக உருண்டு சென்று அமிழ்ந்து கொண்டிருந்தவரை பற்றி வெளியே இழுத்துக் கொண்டு வந்தார். இந்த சாதனைச் செயல் செய்தித்தாள் ஒன்றில் அண்மையில் வாசித்ததாக நினைவில் நிற்கிறது.

**இளையோர் பண்புகள்:** ஆபத்தில் இருப்பவரை காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் அந்த இளைஞரிடம் இருந்தது. அப்படி செய்வதற்கான துணிவும் அவர்களுக்கு இருந்தது. துணிவோடு சிக்க-ல் சிக்கிக்கொள்ளாமல் செயல்படும் சிந்தனையும் அவர்களிடம் இருந்தது. இத்தகைய குணநலன்களும் பண்புகளும் நம் பிள்ளைகளிடம் இருக்க பயிற்றுவிக்க வேண்டியது இன்றைய தேவை.

**வழுக்கி விழும் இளையோர்:** சிந்தனையை மழுங்கடிக்கும் பசப்பு மொழி விளம்பரங்களுக்கு நம் இளைஞர்கள் மயங்கி விடுகின்றனர். விட்டில் பூச்சிகளாக விளம்பரங்களிலே வீழ்ந்து தங்களை இழந்து விடுகின்றனர். கண்ணைக் கவரும் வண்ணங்களிலே கலந்திருக்கும் நஞ்சை மறந்து சுவை இன்பத்திலே தங்கள் உடல் நலம் கெடுவதை கண்டுகொள்ளாமல் நோயுறுகின்றனர். இருந்த இடத்திலேயே தங்களுக்கு கிடைக்கும் ஊடகத் தரவுகளை தரம் பார்த்து அன்னப் பறவைபோல நல்லதை தேர்ந்து கொள்ளும் திறன் இல்லாது வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்து விடுகின்றனர்.

**யார் காரணம்:** ஆசிரியர்களை மரத்தில் கட்டி வைத்து அடிக்கும் மாணவர்கள்; இதனை கேள்விப்படும்போதே வேதனை இதயத்தை நொறுக்குகிறது. தன் பிள்ளை வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும் என்பதற்காக அடுத்தவர் பிள்ளைக்கு நஞ்சு கலந்த குளிர்பானம் கொடுத்து சாகடிக்கும் பெண் பேய்; இப்படிப்பட்ட அவலங்களுக்கு யார் காரணம்? முதல் காரணம் பெற்றோர்; அதற்கு இணையான இரண்டாவது காரணம் சமுதாயம்.

**சமூக அவலங்கள்:** தன் பிள்ளையை கண்டித்து நெறிபடுத்தி நல்லவன(ளா)க உருவாக்குவதற்கு நேரம் இல்லை என்று சொல்வது, பொறுப்பை தட்டிக் கழிப்பது பெற்றோர் குற்றம் இல்லையா? பெற்றோர் நிலையில் இருக்கும் ஆசிரியார், மாணவரை, மாணவியை கடிந்து கொள்ளவோ, அறிவுறுத்தவே கூடாது ஆனால் பிள்ளை மட்டும் ஒழுக்கமுடையவனாக நல்லவனா(ளா)க இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறல்லவா? மக்கள் பணியாளர்களை (இந்திய ஆட்சிப் பணியில் இருப்பவரை) ஒன்றிய அரசின் அமைச்சரே பொது வெளியில் அவமானப்படுத்தினால் மக்கள் சட்டத்தை மதிப்பார்களா?

**விவி-ய அறிவுரை:** பெற்றோரும் சமுதாயமும் தங்கள் கடமையை செய்ய தவறிவிட்டதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். திருவிவி-யம் சொல்லும் அறிவுரையை அவர்கள் மறந்துவிட்டனர். ''நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு; முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார்'' (நீமொழி 22:6). ''பிள்ளாய்! ஆண்டவருக்கும், அரசனுக்கும் அஞ்சி நட கிளர்ச்சி செய்வாரோடு உறவு கொள்ளாதே'' (நீமொழி 24.21) என்று பிள்ளைகளுக்கு சொல்-த்தர பெற்றோர், சமுதாயம் தவறிவிட்டோம். தற்போது நாட்டிற்கு வேண்டியது மனநலம். ஆட்சியாளர்களுக்கு அதிகாரிகளுக்கும் பெற்றோருக்கும் இது இன்று அவசிய தேவை. மன்னிக்கத் தெரியாத மனம் நலமடைய முடியாது. இதனை தென்னாப்பிரிக்க அதிபர் திரு. நெல்சன் மண்டேலா அவர்கள் உறுதிபடுத்துகின்றார்கள். தன்னை சிறையில் வதைத்தவர்களை அவர் மன்னித்தார். அதனால் இன்று தென் ஆப்ரிக்காவில் வெள்ளையர், கருப்பரிடையே அமைதி நிலவுகிறது. (''... Mandela insisted that the country needed healing/ even move than it needed justice'' (The Indian current 29 Aug, Sept 4, 2022 'A Nation that needs Healing' by Robert Clement).

**பொறுப்பேற்போம்:** பிஞ்சி உள்ளங்களிலே நற்பண்புகளை விதைத்து வளரச் செய்யும் பொறுப்பு பெற்றோரையும், ஆசிரியரையும் மற்றும் சமுதாயத்தையும் சார்ந்தது. அதனைச் செய்ய ஒரே வழி கடவுள் நம்பிக்கையையும் மனித நேயத்தையும் பிள்ளைகளுக்கு சொத்தாகக் கொடுக்க வேண்டும். அனைவரிலும் கடவுளைக் கண்டு கொண்ட புனித அன்னை தெரேசாவை போல நம் இளம் தலைமுறையினரும் மற்றவரில் கடவுளைக் கண்டு கொண்டால் இளையோரின் வாழ்வு மலரும். சமுதாயம் சீரடையும் என்பதில் ஐயம் இல்லை. நாம் செய்வோமா?



18-09-2022

# முன்மதியோடு செயல்படு



அருள்திரு. J. இருதயராஜ்
உதவி பங்குத்தந்தை, இருப்புக்குறிச்சி

ஆமோ 8:4-7, 1திமொ 2:1-8 லூக் 16:1-13

ஒரு நகரத்தில் இருந்த மிகப்பெரிய வங்கி ஒன்றிற்கு மூதாட்டி பணம் வைப்புக்காக வருகின்றார். அப்பொழுது வங்கிப் பணியாளர் “எவ்வளவு பணம் வங்கியில் போட வந்தீர்கள்?” என்று கேட்கின்றார். அவர் “பத்து லட்சம் பணம் வைப்புக்காக வந்திருக்கிறேன். ஆனால் வங்கி மேலாளரை சந்தித்துப் பேச வேண்டும்” என்று சொல்- விட்டு வங்கியின் மேலாளரை சந்தித்து முழுவிவரத்தையும் தெரிந்து கொண்டார். வங்கி மேலாளர் மூதாட்டியிடம், “உங்களுக்கு இவ்வளவு பணம் எப்படி கிடைத்தது?” என்று கேட்கின்றார். அதற்கு மூதாட்டி, “பந்தயத்தின் மூலம் கிடைத்தது” என்றார். இவர் சிரித்துக் கொண்டு “பந்தயத்தின் மூலமாக இவ்வளவு பணமா?” என்றார்.

அப்பொழுது மூதாட்டி, “ஆமாம் அதான் உண்மை இப்பொழுது கூட உங்களிடம் ஒரு பந்தயம் வைக்கிறேன். உங்கள் தலையில் நீங்கள் விக் வைத்திருக்கிறீர்கள் அது உண்மை என்று ஒரு லட்சம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்” என்றார். வங்கி மேலாளர் சிரித்து கொண்டு “என் தலையில் நான் விக் வைக்கவில்லை. தேவையில்லாமல் போட்டி வைக்கிறீர்கள்” என்று சிரிக்கின்றார். அதற்கு அவர் “நாளை காலை சரியாக பத்து மணிக்கு என்னுடைய வழக்கறிஞர் உடன் வந்து அதனை நிரூப்பிக்கிறேன்” என்று சொல்-விட்டு சென்று விடுகின்றார். அதுபோலவே அடுத்த நாள் காலை 10 மணிக்கு வழக்கறிஞர் ஒருவரை அழைத்து கொண்டு மூதாட்டி வருகின்றார். வங்கி மேலாளரும் ஒரு லட்சம் வெற்றிபெற போகிறோம் என்ற நிலையில் அமர்ந்திருக் கின்றார். வந்த உடனே மூதாட்டி “உங்களுடைய தலையில் உள்ளது விக்தான் என்பதை நிரூபிக்கிறேன்” என்று சொல்- அவரது தலைமுடியை பிடித்து இழுக்கின்றார். இதனைக் கண்ட வழக்கறிஞர் அதிர்ச்சி அடைகின்றார். அப்பொழுது வங்கி மேலாளரிடம் வழக்கறிஞர் இவ்வாறாக சொல்கிறார். “நான் தோற்று போய்விட்டேன். இந்த மூதாட்டி என்னிடம் ஒரு பந்தயம் வைத்தார். அதாவது இந்த நகரில் உள்ள பெரிய வங்கியின் மேலாளரது தலைமுடியை இழுத்து தள்ளினால் 5 லட்சம் என்று, அதையே மூதாட்டி செய்துவிட்டார். பந்தயத்தில் வெற்றியும் பெற்றுவிட்டார்.” இருவரும் அதிர்ச்சி அடைகின்றனர்.

இயேசுவில் பிரியமானவர்களே இந்த உலகில் வாழ நினைப்பவர்கள் வழியை கண்டடைகின்றனர். தெளிவாக செயல்பட்டு தாங்கள் அடைய வேண்டிய இலக்கை எளிமையாக அடைந்து விடுகின்றனர். இன்றைய வாசகமும் அதனையே தெளிவுபடுத்துகிறது. ஆயினும் கொஞ்சம் வித்தியாசமான முறையில் ஆண்டவர் விளக்கம் தருகின்றார். ஒளியின் மக்களை விட இவ்வுலகின் மக்கள் தங்கள் தலைமுறையினரிடத்தில் மிக்க முன்மதியுள்ளவர்களாய் நடந்து கொள்ளுகிறார்கள் (லூக் 16.8). தன்னுடைய எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தன்னை பாதுகாத்து கொள்ள முன்மதியோடு செயல்பட்ட வீட்டுப் பொறுப்பாளருடைய உவமையை ஆண்டவர் தெளிவு படுத்துகின்றார் அத்தகைய முன்மதி ஆண்டவருடைய அரசில் பங்கெடுப்பதற்கு நம்மிடம் இருத்தல் வேண்டும். அதற்கு இந்த உலக செல்வங்களை முறையாக சரியான விதத்தில் பயன்படுத்தி ஆண்டவருடைய உறைவிடத்தில் சேர்வதற்கும், ஆண்டவரோடு இணைவதற்கும் முன்மதியோடு செயல்பட வேண்டும் என்ற சிந்தனையை இவ்வார்த்தைகள் நமக்கு கொடுக்கிற அழைப்பாகும்.

**முன்மதி :** எந்த நேரத்தில் எப்படி செயல்பட வேண்டும் என்ற நுட்பமான அறிவு இருக்கும் பட்சத்தில் முன்மதியும் அதோடு சேர்ந்து நம்மை சிறப்பான வகையில் செயல்பட வைக்கும். முன்மதியோடு செய்பட நமக்கு ஆண்டவரின் மீது அச்சம் இருத்தல் அவசியம். காரணம் “ஆண்டவர் மீது கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம். அதுவே மாட்சியும் பெருமையும் ஆகும். அக்களிப்பின் மணி முடியுமாகும்” (சீராக் 1.11,14).

முன்மதி என்பது இவ்வுலகில் வெற்றி வெறுவதற்கு என்பதனை கடந்து இவ்வுலகை வென்று விண்ணுலகை நமது நிலையான உறைவிடத்தை தேவையான செயல்பாடுகளை இந்த உலக செல்வங்களை கொண்டு செயல்படுத்துவதாகும்.

**முன்மதியோடு செயல்பட்டவர்கள் :** பாவியான பெண் ஆண்டவருடைய கால்மாட்டில் வந்து அழுது கொண்டே அவருடைய காலடிகளை கண்ணீரால் நனைத்து தம் கூந்தலால் துடைத்து, தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார் (லூக் 7:38-39). ஆண்வரும் அவருடைய பாவங்களை மன்னிக்கின்றார். (முன்மதி: ஆண்டவரிடம் சரணடைதல்) ஆண்டவரை மறுத-த்த பேதுரு மனம் வெதும்பி அழுதல் (முன்மதி: ஆண்டவரிடம் சரணடைதல்). தாவீது அரசர் தவறை உணர்ந்துபோது, ஆண்டவரிடம் நான் பாவி என ஏற்றுக்கொள்ளும். (முன்மதி: ஆண்டவரிடம் சரணடைதல்). இதோ ஆண்டவரின் அடிமை என்பது அன்னை மரியாவின் (முன்மதி: ஆண்டவரிடம் சரணடைதல்). இவைமட்டுமல்ல நம்மோடு வாழ்ந்து மரித்த புனிதர் புனித அகுஸ்தினார், ஆண்டவரிடம் இறுதியில் சரணித்தது மாபெரும் (முன்மதி: ஆண்டவரிடம் சரணடைதல்).

**நாமும் முன்மதி உடையவர்களாக:** மக்களை சுரண்டி துன்புறுத்தி ஏழைகளை கொடுமைபடுத்தி வாழ்ந்த மக்களை ஆமோஸ் இறைவாக்கினர் கண்டிப்பதற்கு காரணம் அவர்களுடைய முன்மதியோடு செயல்படாத நிலையை உணர்த்துவதற்கு (இன்றைய முதல் வாசகம்). நாம் எப்படி செயல்பட வேண்டும் என்பதனை இன்றைய இரண்டாவது வாசகம் தெளிவுபடுத்துகிறது. அனைவருக்காகவும், மன்றாடுங்கள், புரிந்து பேசுங்கள், நன்றி செலுத்துங்கள், இறைப்பற்று கண்ணியம், இவற்றை செயல்படுத்த வேண்டும். தொல்லையின்றி அமைதியோடு வாழ போட்டி, பொறாமை, பொய், கோபம் இவைகளை அகற்றி வாழ்வை முறைபடுத்தி ஆண்டவரின் அன்புக்கு உகந்தவர்களாக வாழ நம்முடைய செயல்பாடுகளை முறைபடுத்தி வாழ்வோம். தேவையில் இருப்போரை அரவணைத்தல் ஆண்டவரை அரவணைப்பதற்கு ஈடாக மாறுகிறது (மத்.25.35-36).

அத்தகைய செயல்பாடுகளில் ஆண்டவரை மகிமைபடுத்தி அவரிலே இணைய முன்மதி உடையவர்களாக வாழ்வோம்.



# அஞ்ச– ஆசிரமம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

“அஞ்ச-” என்றால் மனிதகுலம் அனைத்தையும் இறைவனிடமிருந்து பெறுகின்றது. எனவே அனைத்தையும் அவருக்கு அளிப்பதே ‘அஞ்ச-’ என்று பொருள் பெறும். “ஆசிரமம்” என்பது பாஸ்கு நிகழ்வைக் குறிக்கும் சொல்லாகும். சிரமம் என்பது துன்பம் ஆசிரமம் என்பது துன்பமின்மை இயேசுவின் இறப்பையும் உயிர்ப்பையும் குறிக்கும். எவ்வளவு பொருத்தமானப் பெயரை சுவாமி அமலோர் ஆசிரமத்திற்கு வைத்து பல்சமய மக்கள் அனைவரும் வருவதற்கு “இறையரசு சமூகம்” என்பதைக் கட்டி எழுப்ப இயலும் என்று உணர்வோம்.

**அஞ்ச-யின் நோக்கம்:** பல்சமயக் குழு கூடும் இடம், இந்திய ஆன்மீகம் வழங்கும் இடம், உரையாடலுக்கு உதவிடும் இடம், நீதி, விடுதலைக்குக் குரல் கொடுக்கும் இடம், தலைவர்களையும் தலைவிகளையும் உருவாக்கும் இடம், வேரோட்டமான மாற்றத்தை வளர்த்தெடுக்கும் இடம் என ஏழு நோக்கங்களைக் கொண்டுள்ளது.

**அஞ்ச-யின் அமைப்பு:** அகன்ற, திறந்த வாயிலைக் கொண்டுள்ளது. துவக்கத்தில், படைப்போடு ஒருங்கிணைவு, இரண்டாவது மனித குலத்தோடு ஒருங்கிணைவு, மூன்றாவது தன்னோடு ஒருங்கிணைவு, நான்காவது இறைவனோடு ஒருங்கிணைவு என்ற முழுமைப் பெறுகிறது.

ஆறு முனைகளைக் கொண்ட விண்மீன் இருப்பிடங்கள், தரிசனம், ஸ்பரிசம் என்று ஆண்மை, பெண்மை இவைகளை உணர்த்தும். தொடர்ந்து பிரமிடு கட்டிடங்கள் இரண்டு உண்டு. தெடர்ந்து “ஓம்” என்ற வடிவில் கட்டிடம் இருக்கின்றது. தொடர்ந்து அரசமரம், அத்திமரம் என்று இரண்டு இடங்கள் தியானத்திற்கு உதவிடும். சீனப்பண்பாட்டில் ‘இன்யாங்’ என்று ஒன்றை ஒன்று நிறைவு செய்யும் கட்டிடம் உள்ளது.

நிறைவாக “சத்சித்ஆனந்தா” ஆலயம் முழுமையின் அடையாளமாக அனைத்தையும் ஏற்கும் திருத்தலமாக உள்ளது. கோவி-ன் முன்புறம் நான்கு வேதங்கள், நான்கு நற்செய்திகள், இடதுபுறம் பன்னிரண்டு, வலதுபுறம் பன்னிரண்டு குடில்கள் உண்டு. தொடர்ந்து தியானம் செய்ய இடமும், சோலை வனமும் உண்டு.

**அஞ்ச- அனுபவம்:** முதல் அனுபவமாக “சுயஅனுபவம்” ஏழு நாட்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் அனுபவத்தைத் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றவர்கட்கு “இறைஅனுபவம்” வழங்கப்படுகிறது. சுவாமி அமலோர் இந்த ஆசிரமத்தை ஆரம்பித்தது முதல் 1990 ம் ஆண்டு வரை கண்காணித்து வழிநடத்திக் கொண்டு வந்தார். அவரைத் தொடர்ந்து அஞ்ச- ஆசிரமம் சங்கம் இன்றுவரை கண்காணித்து வருகிறது.

பலர் இவண் அனுபவத்திற்கு வந்துள்ளனர். இப்போது பல்வேறு காரணங்களின் விளைவாக இறைத் தேடிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இன்றைய உலகில் பொதுவாக எல்லாரும், குருக்கள் துறவிகள் கூட உலக நாட்டத்தால் அதிகம் கவரப்படுகின்றனர். கடவுள் பக்கம் வராமல், கடவுளைப் பயன்படுத்தி வருகின்றனர். “சுவாசம் இருக்கும்வரை, நம்பிக்கை உண்டு” என்ற பழமொழியின்படி தீர்ப்பிடாமல் காத்திருப்போம். கடவுள் கைவிடமாட்டார். அஞ்ச-க்குப் போக வேண்டும் என்ற சோதனை வந்தால் உடனே தொடர்பு கொண்டு ஆவன செய்யுங்கள். மைசூர் சாமுண்டிமலை அருகில் ஆசிரமம் அமைந்துள்ளது வருக, வளர்க, வாழ்வு பெறுக, அயலானோடு பகிர்ந்து கொள்வோம்.

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சர்வவியாபியின் ஆண்டு சந்தா புதுப்பிக்கும் போது மணியார்டர் படிவத்தில் முக்கியமாக உங்கள் **சந்தா எண்ணை** மறக்காமல் குறிப்பிடவும். **2022-23** ஆண்டிற்கான சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும்.

**ஆண்டு சந்தா ரூ. 200**

## மண்ணக பிறப்பின் 100–ம் ஆண்டு நினைவு அஞ்ச–

பிறப்பு 14-09-1922



இறப்பு 11-01-2008

திருமதி **M. லூர்துமரி**

புதுவை, காலம் சென்ற S. மதலைமுத்து அவர்களின் மனைவியும், எங்களது தாயாருமாகிய தெய்வதிருமதி. S.லூர்துமரி அம்மாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14-09-2022 புதன் அன்று காலை 6.00 மணிக்கு புதுவை, முத்தியால்பேட்டை புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெறும் பாடல் திருப்ப-யில் கலந்து கொண்டு இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**மகன், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

போட்டி–2

# இறைவனின் அருளால்
# 20–ஆம் ஆண்டின் தொடக்கத்தில்

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - தாராபுரம்



## திருப்பாடல்கள் – 150 முழுவதும்

**வட்டத்திற்குள் எழுத்துக்களை நிரப்பி அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. நீர் அஞ்சுதற்கு உரியவர், உம் திருமுன் நிற்கக் கூடியவர் யார் என்று சொல்லுகிறவர் யார்? O O O
2. தொன்னூறாம் திருப்பாடல் யாருடைய மன்றாட்டாக அமைந்துள்ளது? O O
3. என்றென்றும் உள்ளது அவாரது பேரன்பு என்று எந்த குடும்பத்தார் சொல்வார்களாக? O O O
4. ஆண்டவருக்கு முன் செல்கின்றது இது? O O
5. மோசேயும், ஆரோனும் எந்த நாட்டில் வியத்தகு செயல்களை செய்து காட்டினர்? O O
6. ஆண்டவர் எதை நான் மீற மாட்டேன் என்கிறார்? O O O O O O O O
7. எதற்கு இரக்கம் காட்டவும், அதற்காக குறித்த காலமும் வந்தது? O O O
8. ஆண்டவர் தன் ஆற்ற–னால் எதை அழைத்து வந்தார்? O O O O O
9. ஆண்டவருடைய கூடாரம் எங்கே இருக்கிறது? O O O O O O
10. இரத்தத்தால் தீட்டுப்பட்டது எது? O O O



11. எதைப் பாராதபடி ஆணடவருடைய முகத்தை மறைத்துக் கொள்ளும் என்று தாவீது வேண்டினார். O O O O O O O
12. தாவீது சவுலுக்கு தப்பியோடி எங்கே ஒளிந்து கொண்டிருந்த போது திருப்பாடல் 57–ஐ பாடினார்? O O O O
13. எகிப்தி–ருந்து வருபவர்கள் யார்? O O O O O O
14. தமக்கு அஞ்சி நடப்போருக்கு ஆண்டவர் எதைக் கொடுத்தார்? O O O O O
15. கடவுளுக்கேற்ற ப– எவை? O O O O O O O O O
16. கடவுளுடைய பெயரை எதினால் புகழ்வேன் என்று தாவீது கூறுகிறார். O O O O
17. எளியோன் சிறுமைப்பட்டவன். காயமுற்றவன் கூறியவர் யார்? O O O
18. நேர்மையாளரின் வாய் எதை அறிவிக்கும்? O O O O
19. தன் வாழ்நாளை ஆண்டவர் எவ்வளவு அளவாக்கினார் என்று தாவீது கூறினார்? O O O O O O O O
20. எதை விட்டு விலகி நன்மை செய்ய வேண்டும்? O O O
21. அரசர் ஆண்டவரிடத்தில் எதைக் கேட்டார்? O O O
22. ஆண்டவர் எவைகளில் இடியென முழங்கினார்? O O O O O O
23. யாருடைய நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது? O O O O O
24. தூயகத்தி–ருந்து கடவுள் உனக்கு எதை அனுப்புவார்? O O O
25. ஆண்டவர் எதின்மேல் ஏறி பறந்து வந்தார்? O O O O O
26. ஆண்டவர் தாவீதின் கால்களை எதைப் போலாக்கினார்? O O O O O O
27. எது என் மேலண்ணத்தோடு ஒட்டிக் கொண்டது? O O
28. யாருக்கு புத்தம் புதிய பாடலைப் பாட வேண்டும்? O O O O O O O
29. பொல்லார் மனந்திருந்தாவிட்டால் ஆண்டவர் எதைக் கூர்மையாக்குவார்? O O
30. மனமிரங்கிப் பிறருக்கு கொடுப்பவர் யார்? O O O O O O

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**
அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ்
தலைமை ஆசிரியர்
தூய பேதுரு விவிலிய போட்டி - 2 (திபா.150)
புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 656.
99423 11068

**பதில்களை 10.10.2022 க்குள் அனுப்பி வைக்கவும்.**

# வீட்டைக் கட்டிப்பார்!



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
கியூரியா செயலர், பேராயர் இல்லம்.

"வீட்டைக் கட்டிப்பார், கல்யாணத்தை செஞ்சிப் பார்" என்று நமது வழக்கு மொழியில் சொல்வார்கள். வீட்டிக் கட்டி முடிப்பதும், திருமணத்தை செய்து முடிப்பதும் அவ்வளவு எளிதான காரியங்கள் அல்ல என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இன்றைய காலச் சூழலில் திருமணத்தைக்கூட ஓரளவு செய்து முடித்துவிடலாம். ஆனால், ஒரு வீட்டைக் கட்டுவது ஒரு மனிதனின் வாழ்நாளில் அது மாபெரும் சாதனையாகும். அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

**கட்டுமானப் பொருட்கள்:** கட்டுமானப் பொருட்கள்; கம்பி, ஜல்லி, சிமெண்ட், செங்கல், மணல் மற்றும் மரப்பலகைகள் இவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அப்படியே கட்டுமானப் பொருட்கள் கிடைத்தாலும் அவற்றின் விலை ஏழைகளின் கைகளுக்கு எட்டாத குதிரைக் கொம்பாக உயர்ந்துள்ளது. வீடு கட்டுவது என்பது ஒவ்வொருவருக்கும் வாழ்நாள் கனவு, ஆனால் பலருக்கு அது பலிக்காத பகல் கனவாகவே போய்விடுகிறது.

**கட்டிட ஒப்பந்ததாரர்கள்:** அப்படியே கடன (*கடனாக பெறுவது*) ஒடன (*உடனே தந்துவிடுவதாக பெறுவது*) வாங்கி வீடு கட்டுவதற்கு ஆரம்பிக்கும்போது, கட்டிட ஒப்பந்ததாரர்கள் மிகப்பெரும் சவாலாக (சாபமாக) இடையில் நிற்கிறார்கள். உண்மை தன்மை, நம்பகத்தன்மை இல்லாதவர்களாக மிக மிக சூட்சுமம் மிக்கவர்களாக கட்டிட ஒப்பந்ததாரர்கள் இருக்கிறார்கள்.

**நாள் கூலி:**வீட்டைக் கட்டுவதற்கு நாள் கூலி என்று ஒப்பந்தம் பேசினால், ஒரு நாளைக்கு மிக சொற்பமான வேலையைச் செய்துவிட்டு, நாள் கணக்கை அதிகப்படுத்தி அதற்கான கூலியையும் அதிகப்படுத்தி லாபம் பார்க்கிறார்கள். கட்டுமான பொருட்களுக்கு ஆகும் செலவைவிட, கட்டிட ஒப்பந்ததாரர்களுக்குக் கொடுக்கும் கூலி இரண்டு மூன்று மடங்கு உயர்ந்து நிற்கிறது. கூறிய நேரத்தில் வீட்டை கட்டி முடிக்காமல், அவர்கள் நினைக்கும் நேரத்தில் மட்டுமே முடித்தும் முடிக்காமலும் கொடுப்பார்கள். இன்னும் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டு அவர்களை பகைத்துக் கொண்டால் வேலையை முடிக்காமல் இழுத்தடிப்பார்கள், வேறு இடத்திலும் வேலையை ஒப்புக்கொண்டு அங்கேயும் இங்கேயுமாக அலட்டிக்கொள்ளாமல் அலட்சியமாக வேலை செய்வார்கள்.

**கான்ட்ராக்ட்:** நாள் கூலி வேண்டாம், கான்ட்ராக்டாக (ஒட்டுமொத்தமாக) ஒப்பந்தம் பேசினோம் என்றால்; தரமற்ற கம்பி, தரமற்ற சிமெண்ட் மற்றும் இதர பொருட்களைக் கொண்டு அவசர அவசரமாக, கட்டிடம் உறுதியாவற்குக்கூட அவகாசம் கொடுக்காமல் கடமைக்கு கட்டிமுடிக்கிறார்கள். ஓரிரு மாதங்களுக்குள் வீட்டில் எங்கும் விரிசல்கள் வியாபித்துவிடுகின்றன.

**அநியாயக் கூலி:** ஒரு நாளைக்கு ஒருவருக்கு சர்வ சாதராணமாக 1000 ரூபாய் கூலியாகப் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் வேலைகளோ அந்த ஆயிரம் ரூபாய்க்கு இணையாக இருப்பதில்லை. வடநாட்டுக்காரர்கள் அதிகமாக தமிழகத்திற்கு படையெடுக்கிறார்கள் என்று குறைகூறுகிறோம். அதற்கு காரணம் யார்? இப்படிப்பட்ட கட்டுமான பணிகளில் அவர்கள் மிகக் குறைந்த கூலிக்கு கடினமான உழைப்பைக் கொடுக்கிறார்கள். வேற்று மாநிலத்திலிருந்து அண்டி பிழைக்க வருவதால் யாரையும் ஏமாற்றாமல், அடாவடி செய்யாமல் உண்மையாக உழைக்கிறார்கள். இங்கிருப்பவர்கள் தங்களுக்கு ஆள்பலம், அடியாள்பலம் மற்றும் அதிகாரபலம் இருக்கிறது என்பதால் வரைமுறையின்றி, நாணயமின்றி நாணயத்தை சேர்ப்பதிலேயே குறியாக இருக்கிகிறார்கள்.

உண்மையில் வீடுகட்டுபவர்கள் யாரும் ஒப்பந்ததாரர் களோடு சுமூகமான உறவோடு மனமகிழ்ச்சியோடு கட்டி முடிப்பதேயில்லை. பல மன கசப்புகளோடும் வெறுப்புக் களோடும் மற்றும் ஆராத ரணங்களோடும்தான் முடிக்கிறார்கள். ***(இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாததுபோல் தோன்றினால் வீடு கட்டியவர் களைக் கேட்டுப்பாருங்கள், அல்லது நீங்கள் ஒரு வீட்டைக் கட்டிப் பாருங்கள்)*** ஒப்பந்ததாரர்களுக்கும் குடும்பம், குழந்தைகள் இருக்கின்றன, அவர்களும் பணம் சாம்பாதிக்க வேண்டும்தான், ஆனால் பணத்தைவிட அதிகமான பாவத்தை சம்பாதிக்க வேண்டாமே.

***உழைத்துப் பெறும் கூலி ஆசீர்வாதம்,***
***உழைக்காமல் பெறும் கூலி சாபம்...***
***தனக்கும், தலைமுறைக்கும்***

**உப்பளம், தூய சவேரியார் மேய்ப்புப்பணி மையத்தில், குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்**

நாள் : **17-09-2022 (சனிக்கிழமை)**
நேரம்: காலை 9.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை
இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப் பணி & கலைத்தொடர்பு நிலையம்.**
(புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வளாகம்)
நேத்தாஜி நகர்-1, உப்பளம், புதுச்சேரி-1)



**நடத்துபவர்:** அருட்தந்தை **அலெக்சாண்டர்** பங்குதந்தை,
தூய இருதய ஆண்டவர் ஆலயம், போரூர் – நுகும்பல்,
செங்கல்பட்டு மறைமாவட்டம்.

**போரூர் – நுகும்பல் பங்கு இசைக்குழு**
(அலெக்ஸ், ஜெயசீலன், நேசராஜ், எடிசன்)

**அனைவரும் கலந்துகொண்டு இறை ஆசீர் பெற அழைக்கின்றோம்.**

இவண்,
அருட்தந்தை **பிலோ,**
இயக்குநர், மற்றும் மைய செப தயாரிப்பு குழுவினர். புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம், புதுச்சேரி.



26

# ஆன்மிகமும் பக்தியும்



Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**திருப்பயணம்:**

எல்லாச் சமயத்தைச் சார்ந்தவர்களிடமும் காணப்படும் ஓர் ஆன்மிகம் திருப்பயணம், நடை பயணமாக பல்வேறு ஆலயங்களைத் தனித்தனியாகவும் குழுக்களாகவும் சென்று அங்கு குடிகொண்டுள்ள தெய்வத்தைத் தரிசிப்பது திருப்பயணம். மேலும் இது விவிலியத்தின் தொடக்கத்திலேயே இடம் பெற்றுள்ளது. ''ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பைக் கேட்டபோது அகமகிழ்ந்தேன். எருசலேமே! இதோ நாங்கள் அடியெடுத்து வைத்து உன் வாயில்களில் நிற்கின்றோம்.'' (தி.பா. 122:1-2)

ஆலயங்கள் இல்லாத தொடக்க காலத்தில் கல்லை நிலைநாட்டி அதனை அருட்பொழிவு செய்து அங்கு இறைப்பிரசன்னம் இருப்பதாக நம்பி வணங்கினர்.

எடுத்துக்காட்டாக அபிரகாமைக் கடவுள் அவருடைய சொந்த ஊரையும் இனத்தாரையும் விட்டுப் புறப்பட்டு தாம் காட்டும் நாட்டிற்குச் செல்லும்படிக் கட்டளையிட்டார். அதுவே அவர் செய்த திருப்பயணம். பின்னர் யாக்கோபு தன் சகோதரனின் கோபத்துக்கு அஞ்சி தப்பி ஓடியபோது பாழ்வெளியில் படுத்துறங்கினார். அங்கு இறைவனைக் கனவிலும், இனம் தெரியாத ஓர் வலியவனுடன் போரிட்டு வென்றதிலும் கண்டார். கண்விழித்து அங்கு இறைவனைத் தான் சந்தித்ததாக உணர்ந்து ''உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார், நானோ இதை அறியாதிருந்தேன்.'' (தொ.நூ. 28:16) என்றார்.

**இறைப்பிரசன்னத்தை அறிதல்:** திருப்பயணத்தில் ஏற்படும் முதல் அனுபவம்: நம் வாழ்வில் இந்த இந்தச் சூழலில் எல்லாம் கடவுள் நம்மோடு இருந்திருக்கிறார் என்பதைக் கண்டுணர உதவுகிறது. மேலும் இயேசுவைச் சந்தித்தவர்களிடம் 'இயேசு என்னைப் பின்செல்' என்றார். பிரசன்னத்தை அறிதல் இறைவனைச் சந்திக்கச் செய்கிறது, அந்தச் சந்திப்பு அவரைப் பின்தொடரச் செய்கிறது.

**இறையடியாரைச் சந்தித்தல்:** அபிரகாம் மெல்கிசதேக் என்னும் குருவைச் சந்தித்து அவருக்குக் காணிக்கை செலுத்தி அவருடைய ஆசீரைப் பெற்றார். நமது திருப்பயணங்களிலும் இறையடியார்களைச் சந்திக்கிறோம், ஆலயத்தில் காணிக்கை செலுத்துகிறோம், குருக்களின் ஆசீரைப் பெறுகிறோம்.

அபிரகாம் தாம் கடந்துசென்ற ஊர்களில் எல்லாம் வாழ்ந்த மக்களுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்டார். இன்று நம் நாட்டில் புனித தலங்களுக்கு நடைபயணமாகச் செல்பவர்கள் வழியில் தங்களை வரவேற்கும் எத்தனையோ குடும்பங்களோடு சமய வேறுபாடின்றித் தங்கி அவர்கள் அளிக்கும் உபசரிப்பை ஏற்று மதநல்லிணக்கத்தையும் நட்புறவையும் ஏற்படுத்துகின்றனர்.

இன்று மேலைநாடுகளிலும் திருப்பயணம் என்னும் ஆன்மிகத்தைக் கடைபிடிப்பவர்கள் பலர் நடை பயணமாகவே செல்கின்றனர். திருஅவையும் ஒவ்வொரு மறைமாவட்டத்துக்கும் திருப்பயணிகளுக்கென ஓர் ஆன்மிக வழிகாட்டியை நியமித்து அவர்கள் மக்களோடு பயணித்து இந்த ஆன்மிகத்தால் அவர்கள் அதிக பலனடைய உதவுகின்றனர்.

**திருப்பயணம் செல்வதால் பெறும் ஆன்மிகம்:** முதலாவதாக வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் செல்வதால் பல வசதிகளைத் துறக்கின்றனர். வழிப்பயணத்தில் பலருடன் பேசிப்பழக வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் சகோதர உறவு வளர்கிறது. நமது திருத்தந்தை பிரான்சிஸ் திருப்பயணத்தை ஊக்குவிக்கிறார்: ''கடவுள் ஒவ்வொரு நாளும் உன்னைப் புதிது புதிதான தொடுவானத்தை நோக்கி நடக்க அழைக்கிறார்'' என்கிறார்.

அன்றாட பணிகளிலும் கவலைகளிலும் மூழ்கிக் கிடக்கும் நம்மைச் சிறிது நேரம் அவற்றை மறந்து, நம்மையும் நாம் செய்வதையும், உடன் வழ்பவர்களையும், பிறரையும் நினைக்க ஏற்ற சூழலை ஏற்படுத்துகிறது திருப்பயணம். நடக்கும்போது செபிக்க நேரம் கிடைக்கிறது. கடந்து செல்லும் பாதையின் இரு மருங்கிலும் உள்ள இயற்கையின் அழகைக் கண்டுகளிக்கவும் தக்க சமயமாகவும் உள்ளது திருப்பயணம்.

இயேசு நமக்குக் கொண்டுவந்த மீட்புப் பணியும் ஒரு நீண்ட திருப்பயணம். அவர் தன் தெய்வீகம் துறந்து மனுவுரு எடுத்தது அவர் தொடங்கிய திருப்பயணத்தின் முதல் படி. அதிலிருந்து எழுந்ததுதான் மனுவுரு எடுத்ததின் ஆன்மிகம். தெய்வீகம் துறந்து பாவிகளான மனிதர்களின் இயல்பை ஏற்றுக்கொண்டார். மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டார். ஊர் ஊராகச் சென்றார். தலைசாய்க்க ஓரிடம் கூட இல்லாமல் தம் திருப்பயணத்தைத் தொடர்ந்தார். தம் சீடர்களும் அவ்வாறே வழிப்பயணத்துக்கு பணப்பையோ, கைத்தடியோ இரு அங்கிகளோ எடுத்துச் செல்ல வேண்டாம் என்றார். இதனால் திருஅவை பணபலத்தைச் சார்ந்ததல்ல. திருப்பயணத்திலும் பணம் முக்கிய இடம் பெறுவதில்லை, எனவே இந்த ஆன்மிகத்தில் ஏழைகளும் செல்வந்தரும் பாகுபாடின்றி பங்குபெறுகின்றனர்.

**அகப்பயணம்:** திருப்பயணத்தில் மற்றும் ஒரு முக்கிய அம்சம். தனக்குள்ளேயே சென்று இறையனுபவம் பெறுவது. இதற்கு நான் யார்? என்னுடன் வாழ்பவர்கள் யார்? என்னையே நான் அறிந்துள்ளேனா? என்னைப்பற்றியும் பிறரைப்பற்றியும் நான் கொண்டுள்ள எண்ணங்கள் சரியானவையா? இல்லையா? போன்ற இவற்றை அலசிப்பார்க்க நமக்குள்ளேயே செய்யும் பயணம் சரியான மன மாற்றத்தைக் கொண்டுவரும். அவ்வாறே நம்மைப்பற்றி நாம் கொண்டுள்ள தாழ்வு மனப்பான்மையும் நீங்கும். இந்த உள்ளார்ந்த பயணத்தில் நாம் சந்திப்பது நம்மோடு பயணிக்கும் இறைவன். எங்கெல்லாம் கடவுள் என்னோடு இருந்திருக்கிறார் என்று உணர்ந்த நேரங்களை எல்லாம் நினைக்கும்போது நம்மில் உண்மையான ஆன்மிகம் வளரும்.

ஆக மொத்தத்தில் திருப்பயணம் மனித வாழ்வு இம்மண்ணில் ஒரு தொடர் திருப்பயணம் என்பதைப் போதிக்கிறது. திருப்பயணத்தில் மனிதன் சந்திப்பது ஒரு முடிவு அல்ல மாறாக ஒரு திருப்பம்.

முற்றும்



## கண்டதே காட்சி

- திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

நான் பணி செய்யும் அலுவலகத்திற்கு எதிரில் ஒரு பெட்ரோல் பங்க் இருக்கின்றது. பலபேர் பெட்ரோல் போட வருவார்கள். ஒருநாள் அந்த பெட்ரோல் பங்க் அருகில் ஒரு நபர் டிவிஎஸ் 50 வண்டியை வைத்துக்கொண்டு வண்டிக்கு பெட்ரோல் போட்டுக் கொண்டு வருபவர்களை நிறுத்தி வண்டியைக் காட்டி ஏதோ கேட்பது போலத் தெரிந்தது. நானும் என்ன வென்று பார்த்தேன்.

அவரது வண்டிக்கு பெட்ரோல் போட பணம் இல்லாமல் பிறரிடம் பணம் கேட்பது போலவும் ஒரு கையில் செல்போனை காதருகே வைத்து பேசுவது போலவும் நடித்துக் கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது. அடுத்த மூன்று நாட்கள் பிறகு அதே ஆள் அதே இடம். இது என்ன தொடர் கதையாக இருக்கின்றதே என்ற எண்ணம் மேலெழ அவரிடம் சென்று ஐயா நன்றாகத்தானே இருக்கின்றீர்கள். பிறகு ஏன் இந்த தொழில் என்று கேட்டேன்.

"என் பெயர் மணி. நான் பிச்சை எடுக்கும் தொழில் தான் செய்கிறேன். ஆனால் இந்த தொழில் எனக்கு ரொம்ப பிடித்திருக்கின்றது. நான் பிச்சை எடுக்கின்றேன் என்று யாரும் நினைக்க வாய்ப்பில்லை. தினமும் ஒவ்வொரு பெட்ரோல் பங்க் அருகில் வண்டியோடு நின்று யாசகம் கேட்பேன்.

அனைவரும் உதவும் மனப்பான்மையில்தான் பணம் தருவார்கள். சில்லறை காசுகளை கோவில் உண்டியலுக்காக வைத்துவிட்டார்களோ என்னவோ யாரும் சில்லறை போட மாட்டார்கள். ரூ.5 அல்லது ரூ.10 கொடுப்பார்கள். பல இடங்களில் வசூலிப்பதால் அதை வைத்துதான் காலத்தை ஓட்டுகிறேன். அவ்வப்போது நானும் எனக்கு பெட்ரோல் போட்டுக் கொள்வேன்'' என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

கடந்த ஒரு வாரமாக மணியைக் காணவில்லை. அடுத்த நாள் பங்க் அருகில் நின்று கொண்டிருந்தபோது எங்கே போனீர்கள் காணவில்லையே என்றேன்.

கடந்த கால நிகழ்வினைச் சொல்ல ஆரம்பித்தார். "ஒரு நாள் பெட்ரோல் பங்க் அருகில் தொழிலில் இருந்தபோது வந்த ஒரு சினிமா இயக்குனர் என்னைப் பார்த்தார். என் தொழில் அவருக்குப் பிடித்திருந்தது போலும். என்னிடம் வந்து நான் ஒரு படம் எடுத்து வருகின்றேன். அதில் கோவில் அருகில் அமர்ந்து பிச்சை எடுப்பது போல நடிக்க வேண்டும். அப்போது போலீஸ் வருவார்கள். அவர்கள் வந்தவுடனே அங்கிருந்து ஓடி விட வேண்டும். என்ன வருகின்றாயா என்று கேட்டார்.

எவ்வளவு ஐயா சம்பளம் தருவீர்கள் என்று கேட்டேன். சாப்பாடு போட்டு 5 ஆயிரம் என்றார். தொடர்ந்து பட வாய்ப்பு கிடைக்குமா என்றேன். அடுத்த படம் எடுக்கும் போது பார்க்கலாம் என்றார்.

நான் யோசித்துப் பார்த்தேன். தொடர்ந்து பட வாய்ப்பு கிடைத்தால் பரவாயில்லை. இல்லையென்றால் பிறகு இதே வேலையைத்தான் தொடர வேண்டும். நான் பிச்சைக்காரன் என்ற முத்திரை என் மேல் குத்தப்படும். அப்போது போலீஸ் பார்த்தால் பயந்து ஓட வேண்டியதுதான் என்று உள் மனம் சொன்னது. அந்த படத்தில் நடிக்கும் வேலையே வேண்டாம் என்று சொல்லி விட்டு மீண்டும் பழைய வேலையைத் தொடர இங்க வந்து விட்டேன்'' என்றார் மணி.

மணிக்கு பட வாய்ப்பு இல்லையென்றாலும் தொலைகாட்சி சீரியல் வாய்ப்புகள் ஏராளம் கிடைத்திருக்கும். ஆனால் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்று பழைய வாழ்க்கையிலேயே தொடர்ந்து ஓட ஆரம்பித்து விட்டார். இப்படித்தான் ஒருசிலர் புதிய சிந்தனைகளுக்கு வாய்ப்பு கொடுக்காமல் குண்டுச் சட்டியிலேயே தொடர்ந்து குதிரை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

முதலில் யாரையும் ஏமாற்றக் கூடாது. ஏமாற்றினால் நாமும் ஒரு நாள் ஏமாந்துதான் போவோம். புதிய சிந்தனைகளுக்கு இடம் தர வேண்டும். மாற்றங்களுக்கு மரியாதை தர வேண்டும். ஏனென்றால் மாற்றம் ஒன்றுதான் மாறாதது.

## மகிழ்ச்சியின் ரகசியம்!

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3



என் நண்பருடைய மகனான தொமினிக் ஒரு கணினி பொறியியல் பட்டதாரி. பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் வாடிக்கையாளர் சேவை மையத்தில் பணி. கணினியில் புகார்கள் வந்து சேர்ந்து கொண்டே யிருக்கும். அதுவுமில்லாமல் கைப்பேசியில் அழைத்தும் தொல்லை கொடுப்பார்கள். இவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்டு நிதானமாக பதில் சொல்லி, மேல்நடவடிக்கை எடுத்து அவர்களைத் திருப்தி செய்வதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

ஒரு நாள் பணியின் பொழுது வாடிக்கையாளர் ஒருவர் தன்னைத் திட்டி விட்டதற்காக மனம் நொந்து வேலையை ராஜினாமா செய்துவிட்டார் தொமினிக்.

என் நண்பரையும் தொமினிக்கையும் சந்தித்து பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. நானும் பணி ஓய்வு பெற்ற பிறகு ஒரு நாள் என்னுடன் பணியாற்றிய ஒரு அதிகாரியை சந்திக்க நாக்பூர் சென்றிருந்தேன். நான் தங்கியிருந்த இடத்தில் இருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவில் தேவாலயம் ஒன்று இருந்தது. அந்த தேவாலயத்தில் "அருங்கொடை இயக்க ஒரு நாள் தியானம்" நடைபெறுவதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றேன். அப்பொழுது குருவானவர் "மகிழ்ச்சியின் ரகசியம்" என்ற தலைப்பில் மறையுரை ஆற்றிக் கொண்டிருந்தார்.

பாவம் செய்து விட்டு வருந்தி அதனால் மன நிம்மதி இழந்து மென்மேலும் பாவத்தில் விழுவதற்கு பதில் ஒப்புரவு அருட்சாதனம் வழியாக பாவ விமோசனம் பெற்று மன நிம்மதியடைந்து மகிழ்ச்சியாக வாழலாம் என்ற கருத்தைப் பதிவு செய்தார். நாம் ஏன் ஒரு குருவானவரிடம் சென்று பாவத்தை அறிக்கையிட்டு பாவமன்னிப்புப் பெற வேண்டும்? நாம் நேராக கடவுளிடம் முறையிட்டு அழுது மன்றாடி நம் பாவத்தை மன்னிக்கும்படி கேட்கலாமே? என்ற கேள்வி ஒவ்வொரு கத்தோலிக்கனின் உள்ளத்திலும் எழத்தான் செய்யும். அதற்கான பதில் விவலியத்தில் உள்ளது. பழைய ஏற்பாட்டில் லேவியராகமத்தில் (19:20-22) ஒருவன் செய்த குற்றத்திற்காக, அவன் சந்திப்புக் கூடார வாயிலுக்குள் கொண்டு வரும் ஆட்டுக்கிடாய் வழியாக குரு கறைநீக்கம் செய்கிற போது அவன் செய்த பாவம் மன்னிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அது போல, புதிய ஏற்பாட்டில், இயேசு சீடர்கள் மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியா திருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்கிறார். பாவங்களை மன்னிக்கிறவர் கடவுள்தான் எனினும் அவருடைய பிரதிநிதிகளாகிய அப்போஸ்தலர்களின் வழிவந்த குருவானவர்களுக்கு அந்த பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. செய்த பாவத்தை நினைத்து வருந்திக் கொண்டிருப்பதைவிட குருவானவரிடம் சென்று பாவஅறிக்கையிட்டு ஆறுதலடைவது எவ்வளவு நலம் பயக்கும் என்பதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் ஏராளம்" என்று சொல்லி மறையுரையை முடித்தது வேறு யாருமல்ல என் நண்பனின் மகனான தொமினிக்கே என்பதை அறிந்து பூரித்துப் போனேன்.

## 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி — விண்ணக வாழ்வின் — 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**கித்தேரியம்மாள்** **P.A. ராஜன் (எ) ஆசீர்வாதம்** (S.W.I)

**மறைவு: 16-06-2016** **மறைவு: 20-09-2010**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவா 11:25

**இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக, 20-09-2022 செவ்வாய் காலை 5.00 மணிக்கு கணக்கன்குப்பத்திலும், காலை 6.30 விழுப்புரம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் காலை 6.00 மணிக்கு உழவர்கரை புனித ஜெயராக்கினி அன்னை ஆலயத்திலும் திருப்ப- நிறைவேற்றப்படும் இதை காண்போர் இவர்களது ஆன்மாவுக்காக செபிக்கவும்.**

பிரிவால் துயருறும்

மகன்: அன்பு (எ) அம்புரோஸ், மருமகள்: ரீட்டா - *விழுப்புரம்.*

**மற்றும் உறவினர்கள்**

**கணக்கன்குப்பம்.**

## விண்ணக வாழ்வின் 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 29-04-1921



விண்ணில்: 17-09-2010

திருமதி. **பொம்பே மரி ஸ்தானாபதி**

**W/o. Dr. A. Benedict**

"படைகளின் ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார், யாக்கோபின் கடவுளே நமக்கு அரண்" - திபா 41:7

**திருப்ப-:** இவரது ஆன்ம இறைப்பாற்றிக்காக 17-09-2022 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

செபிக்கும்

**உம் பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

## 22-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.
- திபா 23.6

இதை காணும் அனைவரும் அன்னாரின் ஆன்மா நித்திய பேரின்ப வான்வீட்டில் முடிவில்லா பிரகாசமும் அருளாசியும் பெற்றிட வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனிடம் ஜெபிக்க வேண்டுகிறோம். 1 கர்.1மங்.1திரி.

15-09-2022 வியாழன் காலை 6.00 மணிக்கு திருப்பாப்பு-யூர் கம்மியம்பேட்டை, புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

திரு. **M. ஏகாம்பரம்**
**அருள்நாதன்,** M.A.,B.Ed
(தலைமை ஆசிரியர் ஓய்வு)
**தோற்றம்: 4-5-1938**
**மறைவு: 15-9-2000**

பிரிவால் துயருறும்
**மனைவி, மகள்கள்,**
**மருமகன்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**
கடலூர் - 2.

**AVAILABLE**

**Preparation for First Holy Communion & Confirmation**




**Cost**
**Rs. 20/- only.**
**postage separate**

**Available in Mission Press, Pondicherry-1.**



பிறப்பு: 15-06-1966

இறப்பு: 15-09-2021

**MARIA PREGASSAM VICTUS ANAND**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

ஓ இனிய இயேசுவே! அன்பிற்கும் நீதிக்கும் உறைவிடமான ஆண்டவரே! எங்கள் மத்தியில் சூரியன்போல் பிரகாசித்து! உமது அளவில்லாத அன்பினால் அழைத்துக் கொள்ளப்பட்ட

### திரு. மரி பிரகாசம் விக்டஸ் ஆனந்து

அவரின் ஆன்மாவிற்கு இரக்கம் புரிந்து நித்திய பேரொளியில் சேர்த்து, முடிவில்லா பிரகாசத்தை அவருக்கு அளித்தருள இறைவா உம்மை கரங்குவித்து மன்றாடுகிறோம். - ஆமென்.

15-09-2022 வியாழன் அன்று காலை 6.00, மாலை 5.30 மணிக்கு புதுவை புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திலும், காலை 6.00, மதியம் 12.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும், 05-10-2022 வினோபா நகர், புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை திருப்ப- நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்மாவுக்காக செபிக்க கேட்கிறோம்.

**Wife, Children,**
**Sisters & Relatives**

---

## நினைவு அஞ்சலி

## விண்ணக வாழ்வின் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு : 03-12-1934
இறப்பு: 25-03-2007

பிறப்பு : 05-12-1943
இறப்பு: 13-09-2018

**திரு.S.அந்தோனிராஜ்,** **திருமதி.A.பெர்னெதெத் அம்மாள்**

தலைமை ஆசிரியர் (ஓய்வு) M.A.M.Ed,B.G.L.

"அவர்கள் அமைதிக்குள் சென்றடைகின்றனர். நேர்மையான வழிமுறையைப் பின் பற்றுவோர் தம் இறுதிப் படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர்" (எசா 57:2)

திரு. S.அந்தோனிராஜ் தலைமை ஆசிரியர், இவரது மனைவி திருமதி A.பெர்னெதெத் அம்மாள் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-09-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு மதுராந்தகம், புனித அந்தோணியார் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள் மற்றும் பேரக்குழந்தைகள்.**

மதுராந்தகம்.

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு : 01-04-1929

இறப்பு: 09-09-2021

**திரு M.சந்தியாகு**

தலைமை ஆசிரியர் (ஓய்வு)

"உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு, உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு" - திபா. 16.11

*என்றும் உங்கள் நினைவில்...*

மனைவி: திருமதி. ராஜம்மாள் (லேட்)
மகன்கள்:Rev.Fr.S.அந்தோணி சகாயம் (லேட்)
திரு.எட்வர்ட் மோசஸ்-திருமதி.சகாயமேரி
அருட்பணி.Dr.S.ஜான் போஸ்கோ CPPS
திரு. பவுல் சுந்தர் - திருமதி கீதா ரீட்டா
மகள்: A. அருள்ராஜ் - -ல்- பிரான்சிஸ்கா
மற்றும் பேரப்பிள்ளைகள், உறவினர்கள்
முகையூர்



# விண்ணக வாழ்வின் 40-ம் நாள் நினைவு

**இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். – 1தெச. 4.14**

கடந்த ஒன்பது மாதங்களாக நடக்க முடியாமல் போனாலும், தன் உடல் வேதனைகளுக்கு மத்தியிலும், **மேரி பரிமளா** எங்களிடம் அன்புமொழி பேசி, பாச மழை பொழிந்து வந்தார்கள். கடைசி சில நாட்கள் அவர்களால் பேச முடியவில்லை. இன்னும் சில நாட்கள் எங்களோடு அவர்கள் இருக்க வேண்டும் என்று விரும்பினோம்; கடவுள் அவர்களை 09-08-2022 தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

*18-09-2022 ஞாயிறு அன்று அவர்களின் விண்ணக பிறப்பின் 40வது நாளை நினைவு கூறுகிறோம். அன்று மதியம் 12.00 மணிக்கு, புதுவை திரு இருதய ஆண்டவர் பசி-க்கா வில் திருப்ப- நிறைவேற்றப்படும்.*

பிரிவால் துயருறும்
கணவர் : **ஜான் பி-ப் வின்செண்ட்**
மகள் : **மேரி ரூவா**
**மற்றும்**
**குடும்பத்தினர், உறவினர்கள்.**

## திருமதி J. மேரி பரிமளா

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02-06-1978 | 09-08-2022 |

---

## விண்ணக வாழ்வின் 9-ம் ஆண்டு நினைவு



தோற்றம்:02-05-1954
மறைவு: 17-09-2013

## திருமதி. K.ஜெசிந்தா,

ஆசிரியை

"நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே!" (பிலி 1:21)

**திருப்ப-**

**17-09-2022, சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு செல்-யம்பட்டி, தருமபுரி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.**

என்றும் உன் அன்பில் வாழும்
கணவர்: **ஆ. மரியசெல்வம்**
பிள்ளைகள், உடன் பிறந்தோர்,
மருமகன்கள், மருமகள்,
மற்றும் பேரப்பிள்ளைகள்.

---

## விண்ணக வாழ்வின் 11-ம் ஆண்டு நினைவு



தோற்றம்:26-12-1971
மறைவு: 14-09-2011

## திரு.ம.இம்மானுவேல் ஜோசப்

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்" (எசா. 62:3)

**திருப்ப- நாள்** : **14-09-2022, புதன்**
**நேரம் : காலை 6.00 மணி**
**இடம் : ஆரோக்கிய அன்னை ஆலயம், அரியாங்குப்பம், புதுச்சேரி.**

இவரது ஆன்மா விண்ணகப் பேரின்ப வான்வீட்டில் முடிவில்லாதப் பிரகாசமும் அமைதியும், அருளும் பெற்றிட செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும்...
அன்பு மனைவி: **A.** மார்கிரேட்
அன்பு மகள்: **E.** டானியா பிரான்சி
பெற்றோர், சகோதரர் மற்றும் உறவினர்கள்.

---

## விண்ணக வாழ்வின் 19-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணில்: 09.11.1916
விண்ணில்: 18.09.2003

## அருட்சகோதரி. நர்சிஸ்மேரி, FIHM

**வார்த்தைப்பாடு: 06.09.1935**

"ஆண்டவரே! உமது பேரன்பிற்கேற்ப என் குரலைக் கேட்டருளும்; உமது நீதியின்படி என்னுயிரைக் காத்தருளும்" – திபா 119:149

கருணையே உருவான இறைவா! எங்கள் மத்தியில் பேரொளியாக பிரகாசித்து, அன்பின் ஊற்றாய் திகழ்ந்து, செயலினால் அனைவரின் மனதிலும் அமர்ந்து நித்திய சமாதானத்தில் இளைப் பாற உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எம் அருட்சகோதரி நர்சிஸ்மேரி அவர்களுக்கு நித்திய பேரின்பத்தை அளித்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

**பிரிவால் துயருறும்**
**தம்பி, தங்கைகள், தம்பி-தங்கையின் மகன்கள், மகள்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.**

# அருள்தந்தை P. அந்தோணிசாமி அடிகளார் இறையடி சேர்ந்தார்



பாண்டி - கடலூர் உயர் மறைமாவட்டத்தின் முன்னாள் முதன்மை குரு, பேரருட்திரு. P. அந்தோணிசாமி அவர்கள் 05.09.2022 திங்கள் அன்று இரவு 9.10 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள். அவரின் நல்லடக்கத் திருப்பலி யானது 06.09.2022 செவ்வாய் அன்று மாலை புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

**பிறப்பு:** அருட்தந்தை P. அந்தோணிசாமி அவர்கள் 29.03.1940 அன்று திரு.C.பொன்னுசாமி மற்றும் திருமதி மகிமைமேரி இவர்களின் மகனாக துறிஞ்சிப்பூண்டியில் பிறந்தார்.

**கல்வி:** தனது தொடக்கக் கல்வியை துறிஞ்சிப்பூண்டியில் பயின்றார். பின்னர் திண்டிவனம் புனித அன்னாள் பள்ளியில் படித்தார். 1956-ல் புனித ஆக்னஸ் இளங்குருமடத்தில் சேர்ந்தார். 1961-67 வரை புனித பேதுரு குருமடத்தில் தத்துவவியல் மற்றும் இறையியல் படிப்புக்களை படித்தார். டிசம்பர் மாதம் 23 ம் தேதி 1967 ம் ஆண்டு குருவாக மேதகு அம்புரோஸ் ஆண்டகை அவர்களால் திருநிலைபடுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 20.05.1968 - ஜூன் 1971 வரை காரைக்கால் புனித தேற்றரவு மாதா ஆலய உதவி பங்குத் தந்தையாகவும், 1972-ல் சென்னை பூந்தமல்லியில் உள்ள புனித பவுல் விவிலிய நடுவத்தில் ஓராண்டு பயிற்சியும் பெற்றார்.

1973 ம் ஆண்டு முதல் 1978 வரை துறிஞ்சிக் கொல்லை பங்குத்தந்தையாகவும், 1978 ம் ஆண்டு முதல் 1985ம் ஆண்டு வரை வெள்ளைக்குளம் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். 1985 - அக் 1989 வரை கனக்கன்குப்பம் பங்குத்தந்தையாகவும், அக் 1989 முதல் ஜூன் 1991 வரை கடலூர் முதுநகர் புனித சவேரியார் பங்கின் பங்குத்தந்தையாகவும், மேலும் 1991 முதல் 1993 வரை கள்ளக்குறிச்சி பங்குத் தந்தையாகவும், மறைவட்ட முதன்மை குருவாகவும் பணியாற்றினார்.

1993 முதல் 1997 வரை D.O.S (மறைமாவட்ட பள்ளிக் குழுமத்தின்) செயலராகவும், மற்றும் மறைமாவட்டத்தின் தென்னாற்காடு அமைப்பின் செயலராகவும் பணியாற்றினார். 1997 முதல் 2000 வரை நெய்வேலி புனித காணிக்கை அன்னை பங்கின் பங்குத்தந்தையாகவும் மற்றும் மறைவட்ட முதன்மை குருவாகவும் பணியாற்றினார். 2000 முதல் 2004 வரை அணிலாடி திருஇருதய ஆண்டவர் பங்கின் பங்குத்தந்தையாகவும், 2004 முதல் 2010 வரை உயர் மறைமாவட்ட முதன்மை குருவாகவும் பணியாற்றினார். 2010 முதல் 2017 வரை ரெட்டியார்பாளையம் புனித அந்திரேயா பங்கின் பங்குத் தந்தையாக பணியாற்றி ஓய்வுபெற்றார். 09.07.2017 லிருந்து எம்மாவுஸ் குருக்கள் ஓய்வு இல்லத்தில் ஓய்வில் இருந்தார்.

உடல்நிலை சரியில்லாத நிலையில் குளுனி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூன்று வாரங்களாக சிகிச்சைப் பெற்று வந்தார். இந்நிலையில் 05.09.2022 திங்கள் அன்று இரவு 9.10 மணியளவில் இறைவனடிச் சேர்ந்தார். 06.09.2022 செவ்வாய் மாலை 4.00 மணிக்கு புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் மேதகு பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

அருட்தந்தையின் உறவினர் அருட்தந்தை. இயேசுதாஸ் SDB அவர்கள், "அருட்தந்தை அவர்கள் கோதுமை மணியாக தன்னையே இறைப்பணிக்கென அர்ப்பணித்தார். அவர் தன் குடும்பத்தை மறந்து, மறைமாவட்டத்தையே தன் குடும்பமாக எண்ணினார். யாருடனும் மனக்கசப்புக் கொள்ளாமலும், எல்லோருடனும் அன்புடன் வாழ்ந்தார். மறைமாவட்டம் அவரை மிக நன்றாக பார்த்துக் கொண்டது, அவரும் மறைமாவட்டத்திற்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார். "வாழ்வது நானல்ல, என்னில் வாழ்வது கிறிஸ்துவே" என்னும் இறைவார்த்தையை முற்றிலும் வாழ்வாக்கியவர் அவர். நற்கருணை ஆண்டவர்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தன் வாழ்வில் இறுதிவரை எளிமையைக் கடைபிடித்து வாழ்ந்தார். அவருக்கென்று யாரும் எதிரிகள் இல்லை, எல்லோரையும் அன்பு செய்தார். நாமும் அவரைப்போல ஒருவர் ஒருவரை நேசித்து வாழ்வோம். இந்த உலகம் கர்ஜிக்கும் சிங்கத்தைப்போல நாம் எப்போது சண்டையிட்டுக் கொள்வோம் என்று காத்துக்கொண்டிருக்கிறது, சாதி, மதம் மற்றும் அதிகாரம் இவற்றை திருச்சபையில் புகுத்திக்கொண்டிருக்கிறது. அவற்றிற்கு நாம் இடம் கொடுத்தோம் என்றால் இந்தத் திருப்பலி நமக்கு பலன் தராது. அன்பில் வாழ்வோம், திருப்பலியின் பயனைப் பெறுவோம்." என்று மறையுரையாற்றினார். திருப்பலிக்கு பின் அருட்தந்தையின் அண்ணன் மகன் திரு. அமல் நன்றி கூறினார்.

திருப்பலியில் ஏறக்குறைய 60 அருட்தந்தையர்களும் மற்றும் அருட்சகோதரிகளும் இறைமக்களும் திரளாக கலந்துகொண்டு அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர். திருப்பலிக்குப்பின் குருக்கள் கல்லறையில் அருட்தந்தையின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.